DINAKARAN

16 JUNE 2022

PAGE 14

14 • Puducherry 16.6.2022

திருக்கனூரில் உள்ள

# தனியார் கல்வியியல் கல்லூரியில் மாணவர்கள் சேர வேண்டாம்

## புதுவை பல்கலைக்கழகம் அறிவுறுத்தல்

புதுச்சேரி, ஜூன் 16: புதுவை பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: புதுச்சேரி திருக்கனூரில் உள்ள உஷா இலட்சுமணன் கல்வியியல் கல்லூரிக்கு, கல்வியியல் கல்லூரியை நடத்த தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் இல்லாததால் 2019-20, 2020-21 மற்றும் 2021-22 ஆகிய கல்வியாண்டிற்கான இணைப்பு வழங்கப்படவில்லை. மேலும், தேசிய ஆசிரியர் கல்வியியல் கழகம் சில விஷயங்களில் இணங்காததற்காக கல்லூரிக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியுள்ளது. புதுவை பல்கலைக்கழகம் மற்றும் தேசிய ஆசிரியர் கல்வியியல் கழகம் ஆகியவற்றுக்கு எதிராக கல்லூரி 2019, 2021, 2022 ஆகிய ஆண்டுகளில் தாக்கல் செய்த ரிட் மனுவைச் சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

சென்னை உயர்நீதிமன்றம் கடந்த 2021ம் ஆண்டு செப்டம்பர் 7ம் தேதியிட்ட தனது ஆணையில், என்.சி.டி.இ மற்றும் புதுவை பல்கலைக்கழகம் ஆகிய இரண்டாலும் மனுதாரர் நிறுவனத்திற்கு எதிராகசுட்டிக்காட்டப்பட்ட உண்மைநிலை, சூழ்நிலைகள் மற்றும் கடுமையான குறைபாடுகளை கருத்தில் கொண்டு, என்.சி.டி.இ மற்றும் புதுவை பல்கலைக்கழகம் எடுத்த முடிவில் தலையிட இந்த நீதிமன்றத்திற்கு எந்த முகாந்திரமும் இல்லை என்று வெளியிட்டுள்ளது. மேலும், இந்த கல்வி நிறுவனம் செயல்பட அனுமதிக்க முடியாது. இது வளர்ந்து வரும் அனைத்து ஆசிரியர்களின் எதிர்காலத்தையும் நிச்சயமற்றதாக மாற்றும். ரிட் மனுக்கள் இரண்டிலும் எந்த தகுதியும் இல்லை. ஒவ்வொரு முறையும் இந்த நீதிமன்றத்திலிருந்து சில இடைக்கால உத்தரவை பெற்று, இந்த நிறுவனத்தைத் தொடர்ந்து நடத்தி வருவதுதான் மனுதாரரின் முயற்சியாக தெரிகிறது. அத்தகைய நடைமுறைக்கு இந்த நீதிமன்றம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டியிருக்கிறது என்று வெளியிட்டுள்ளது.

எனவே, மேற்படி கல்லூரியில் பல்கலைக்கழகத்தின் இணைப்பு இல்லை என்பதால் மாணவர்கள் சேர்க்கை பெற வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள். புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ள எந்தவொரு உயர்கல்வி நிறுவனத்திலும் சேருவதற்கு முன்பு அனைத்து மாணவர்களும் உள்கட்டமைப்பு வசதிகள், தேவையான பணியாளர்களின் இருப்பு மற்றும் புதுவைப் பல்கலைக்கழகத்தின் இணைப்பு ஆணைகளைச் சரிபார்க்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

THE HINDU

16 JUNE 2022

PAGE 2

# Check affiliation before joining colleges: varsity

SPECIAL CORRESPONDENT
PUDUCHERRY

Pondicherry University has advised students to check the University's affiliation status before joining any institution of higher education in the Union Territory of Puducherry.

The word of caution comes after the Usha Latchumanan College of Education, Thirukannur, was refused any relief by the Madras High Court on a writ petition against Pondicherry University and National Council for Teacher Education (NCTE) for withholding affiliation.

In a press note, the University said the college has not been granted affiliation for the academic years 2019 - 2020, 2020 - 2021 and 2021 - 2022 since they do not have the required infrastructure and facilities to run the college of education.

Further, National Council for Teacher Education (NCTE) has also issued a show cause notice to the College for its non-compliance on certain issues.

According to the press note, the court had categorically refused to interfere with the decision taken by the University and the NCTE to not grant affiliation as the college had failed to address serious deficiencies, the press note said.

The Pondicherry University cautioned students to not seek admission in the said college as it does not possess affiliation of University. "All students are advised to check infrastructure... availability of required staff and Pondicherry University's affiliation orders before joining any institution in Union Territory of Puducherry", it said.